**செய்தி வெளியீடு எண்: 621** **நாள்: 05.09.2018**

# செய்தி வெளியீடு

தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் தமிழகம் முழுவதும் இதுவரை சுமார் 27,50,000 செட்டாப் பாக்ஸ்களை பொதுமக்களுக்கு கேபிள் ஆபரேட்டர்கள் வாயிலாக வழங்கி செயலாக்கம் செய்துள்ளது. இந்நிறுவனம் பொதுமக்கள் மற்றும் கேபிள் ஆபரேட்டர்களின் நலன் கருதி தனது செட்டாப் பாக்ஸ்களை இலவசமாக வழங்கி வருகிறது. எனவே, இந்நிறுவனத்தால், வழங்கப்படும் செட்டாப் பாக்ஸ்கள் தமிழ்நாடு அரசின் இந்த நிறுவனத்திற்கு சொந்தமானதாகும்.

இந்நிலையில், சில தனியார் MSO–க்கள் “அதிரடி” என்ற தலைப்பில் ஒரு வாட்ஸ் ஆப் செய்தி கேபிள் ஆபரேட்டர்கள் மற்றும் பொதுமக்களிடையே பரப்பி வருகிறார்கள். அதில், எந்த டிஜிட்டல் கம்பெனியின் செட்டாப் பாக்ஸையும் கொடுத்து தங்களது செட்டாப் பாக்ஸை இலவசமாக பெற்றுக் கொள்ளலாம், எந்தவொரு முன்பணமும் கட்ட தேவையில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசு நிறுவனத்திற்கு சொந்தமான செட்டாப் பாக்ஸ்களை, வேறொரு நிறுவனத்தின் செட்டாப் பாக்ஸிற்காக மாற்றிக்கொள்வது (Exchange) என்பது சட்டத்திற்கு புறம்பான செயலாகும். அரசுக்கு சொந்தமான செட்டாப் பாக்ஸ்களை தனியார் நிறுவனத்திடம் கொடுத்து மாற்றிக்கொள்வது கிரிமினல் குற்றம் ஆகும். இச்செயலில் ஈடுபடும் கேபிள் ஆபரேட்டர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

- மேலாண்மை இயக்குநர்
தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**